DINATHANTHI 07 JUNE 2010




விழாவில் பசுமைக்கரங்கள் திட்டத்துக்கான தேசிய விருதை முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ஈஷா அமைப்பின் தலைவர் ஜக்கிவாசுதேவிடம் வழங்கிய போது எடுத்த படம். மத்திய மந்திரிகள் சல்மான்குர்ஷித், சச்சின் பைலட் ஆகியோர் அருகில் உள்ளனர்.

# ஈஷா பசுமைக்கரங்கள் திட்டத்துக்கு ரூ.5 லட்சம் தேசிய விருது

## முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் வழங்கினார்

புதுடெல்லி, ஜூன்.7– ஈஷா பசுமைக்கரங்கள் திட்டத்துக்கு ரூ.5 லட்சத்துக்கான தேசிய விருதை டெல்லியில் நடந்த விழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் வழங்கினார்.

### பசுமைக்கரங்கள் திட்டம்

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு ஈஷா பவுண்டேஷனால் தொடங்கப்பட்டது பசுமைக்கரங்கள் திட்டம். இந்த திட்டம் தொடங்கப்பட்ட கடந்த 2004–ம் ஆண்டு முதல் இதுவரை 82 லட்சம் மரக்கன்றுகளை, 20 லட்சம் தன்னார்வ தொண்டர்களுக்கும் மேற்பட்டவர்களை கொண்டு நட்டு உள்ளன.

2006–ம் ஆண்டு 2½ லட்சத்துக்கும் அதிகமான தன்னார்வ தொண்டர்களைக் கொண்டு 3 நாட்களில் 8 லட்சத்து 56 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு உலக சாதனை புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்று சாதனை படைத்தனர்.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 1987–ம் ஆண்டு இந்திரா காந்தி பர்யவரன் புரஸ்கார் (ஐ.ஜி.பி.பி.) என்ற விருதை அறிவித்தது. இந்த விருது 5 லட்சம் ரூபாயையும் ஒரு வெள்ளித்தாமரைக்கோப்பையையும் உள்ளடக்கியது ஆகும்.

### தேசிய விருதை அப்துல்கலாம் வழங்கினார்

ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் மக்களிடையே சுற்றுப்புற விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்க்க பெரும் அளவில் மேற்கொண்டதை அங்கீகரித்து 2008–ம் ஆண்டுக்கான இந்த தேசிய விருதை ஈஷா பவுண்டேஷன் நிறுவனத்துக்கு மத்திய அரசு வழங்கியது.

இதற்கான விருது வழங்கும் விழா டெல்லி விஞ்ஞான பவனில் நடந்தது. விழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பசுமைக்கரங்கள் அமைப்பின் தலைவர் ஜக்கி வாசுதேவிடம் இந்த விருதை வழங்கினார். விழாவில் மத்திய மந்திரிகள் சல்மான்குர்ஷித், சச்சின் பைலட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில்

உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடும் வகையில் ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில் தமிழ்நாட்டில் 32 இடங்களில் மரக்கன்றுகளை நட்டு உள்ளது.